தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : சித்திரை | இதழ் : 04



பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ மாதாந்த செய்தி வெளியீடு



சிறப்புச் செய்தி

"தமக்கென ஒரு இடம் அழகான வாழ்க்கை" – தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகள் கையளிப்பு நிகழ்வு.....

முக்கிய செய்தி

சிறந்த சிறுதொழில் முயற்சியாளர்களை தேர்வு செய்து ஊக்குவிக்கும் நிகழ்வு.....

வேலை தேடும் இளையோருக்கான தொழிற் சந்தை நிகழ்வு.....

விழிப்புணர்வு நிகழ்வுகள்

மகளீர் தொழிற்பயிற்சி நிலையத்தின் மகளீருக்கான விழிப்புணர்வு நிகழ்வு .....

மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு.....

தொகுப்பு :- சமூக சேவை கிளை
பிரதேச செயலகம்
தென்மராட்சி

உத்தியோகபூர்வ அங்கீகாரம்
பிரதேச செயலர் - தென்மராட்சி

□□□ □□□□□□□□

□□□□□□□

“சமுர்த்தி அபிமானி” வர்த்தக கண்காட்சியும் விற்பனை சந்தையும்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் “சமுர்த்தி அபிமானி” வர்த்தக கண்காட்சியும் விற்பனை சந்தையும் மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் திரு.F.C.சத்தியசோதி தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.







நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. ம.பிரதீபன் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு. பொ. ஸ்ரீவர்ணன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் திரு.த.கபிலன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் கு.ஜெம்ஸ் இன்பராஜ், மக்கள் வங்கி முகாமையாளர் திரு.கு.வெங்கடேஸ், உலக தரிசன நிறுவன இணைப்பாளர் திரு.அ.றோய் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். அத்துடன் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலக தலைமையக முகாமையாளர், வங்கிச் சங்க முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோரும் கலந்து சிறப்பித்தனர். மேலும் நிகழ்வில் தொழில் முயற்சியாளர்கள், பொது மக்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சமுர்த்தி பயனாளிகளுக்கான தொழில் முயற்சிகளிற்கான கடன்களும் வழங்கப்பட்டது.

விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களை மகிழ்வூட்டும் வகையிலான பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வு



World Vision Lanka நிறுவனம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடாத்திய விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களை மகிழ்வூட்டும் வகையிலான பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வு 09.04.2026 அன்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு சிறப்புற நடைபெற்றது.

World Vision Lanka நிறுவனத்தின் சாவகச்சேரி மற்றும் சங்கானை பிரிவுகளுக்கான முகாமையாளர் திரு. ஆர்.அமிர்தநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் பிறந்த தினத்தைக் கொண்டாடிய விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளை உள்ளடக்கிய வகையில் அவர்களை மகிழ்வூட்டும் வகையில் கேக் வெட்டப்பட்டு அவர்களுக்கு ஊட்டிவிடப்பட்டு அவர்களது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.



இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக World Vision Lanka நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் திரு. A.U.நிஷாந்தன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திரு. கு.ஊ சத்தியசோதி, சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்ஷினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உற்பத்தியாளர்களின் உற்பத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்

சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உற்பத்தியாளர்களின் வியாபாரத்தின் உற்பத்தி தரம், பொதியிடல், Brand, மற்றும் சந்தை வாய்ப்பு (Export) என அவர்களின் உற்பத்தி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான (Business level up program) நிகழ்வானது இவ் வருடம் 15 முயற்சியாளர்களினை தெரிவு செய்யும் நிகழ்வானது எமது பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எவ். சி. சத்திய சோதி தலைமையில் இடம்பெற்றது.



முதலாம் நாள் நிகழ்வு

பிரதேச செயலக உத்தியோகத்தரகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இணைந்த இந்நிகழ்வானது இரண்டு நாட்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பிரதேச செயலருடன் பிரதிதிட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. த. தனஞ்செயன் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிறுதொழில் முயற்சியாளர்கள் அகியோர் கலந்து கொண்டனர்.



இரண்டாம் நாள் நிகழ்வு - 17.04.2026

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் F.C. சத்தியசோதி கிளிநொச்சி மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் திரு. ச.சசீபன் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். தொழில்துறை திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் சிறுதொழில் முயற்சியாளர்கள் அகியோர் கலந்து கொண்டனர்.



சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய விளிப்புணர்வு நிகழ்வுகளின் வரிசையில்

யா/சாவகச்சேரி சக்தி அம்மன் பாடசாலையில் 21.04.2026 செவ்வாய்க் கிழமை மு.ப 11.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் தரம் 2-5 வரையிலான மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது. இதில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம், வரவு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.





23.04.2026 அன்று கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தித் திணைக் களத்தின் மகளீர் தொழில் பயிற்சி நிலையத்தில் அழகுக்கலை பயிலும் மாணவிகளுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை எனும் தலைப்பில் விழிப்புணர்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான இ.தர்மேந்திரா க.இராசகுமார் தி.சுதாகினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

J/291 கைதடி தெற்கு சமூக அபிவிருத்தி குழுவினால் (CDC-பிரஜாசக்தி) 19.04.2026 அன்று பிற்பகல் ஆக்கிரமிப்பு களையான பாதீனியம் கட்டுப்படுத்தலிற்கான விழிப்புணர்வு சிரமதான நிகழ்வு கைதடி வடக்கு வீதியில் முன்னெடுக்கப்பட்டது. கைதடி பிரதேசத்திற்கு அச்சுறுத்தலாகவும் பாரிய சவாலாகவும் அமைந்துள்ள இக்களைச்செடியின் பரவலாக்கத்தினை மட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் இச்சபையின் (CDC) முதலாவது சிரமதான செயற்பாடாகவும் இது அமைகின்றது.





யா/இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வானது 28.04.2026 (செவ்வாய் கிழமை) அன்று மதியம் 12.00 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு, மாணவர்களது கடமைகளும் பொறுப்புகளும், மாணவர்களது ஒழுக்க மேம்பாடு மற்றும் பிரச்சனைகளை கையாளுதல் ஆகிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந் நிகழ்வில் வளவாளர்களாக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், உளவளத்துணை உத்தியோகத்தர் மற்றும் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வானது 28.04.2026 அன்று மு.ப 11.30 - பி.ப 1.00 மணி வரை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவர்களது ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் வளவாளர்களாக உளவளத்துணை உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.







தென் துளிர் - மாதாந்த இதழ் சித்திரை - 2026

அஅஅஅஅஅஅஅஅஅஅ அஅஅஅஅஅஅ

தென்மராட்சி பிரதேச செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் ஒன்றிணைந்து வேலை தேடும் இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சந்தை நிகழ்வு 2026.04.25 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடாத்தப்பட்டது .இந் நிகழ்வில் தொழில் மற்றும் தொழில் பயிற்சி வழங்கும் அரச, தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டன.

பிரதேச செயலகம் - தென்மராட்சி நேர்மையான நிர்வாகம் - சிறந்த பொதுச்சேவை - மக்களின் நம்பிக்கை 9

“தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை” - தேசிய சிறப்பு வேலைத்திட்டம்



“தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை” என்ற தொனிப் பொருளின் கீழ் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள குடியமர்ந்த மக்களில் நீண்ட காலமாக தற்காலிக வசிப்பிடங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு பாதுகாப்பானதொரு வசிப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் யாழ் மாவட்டத்தில் வீடுகளை நிர்மாணிக்கும் விசேட வேலை திட்டம் தென்மராட்சியில் 2026.01.16 வெள்ளிக்கிழமை அன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதி பங்களிப்பில் (ஒரு வீட்டிற்கு ரூபாய் இரண்டு மில்லியன்) மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவரின் வீட்டுக்கான அடிக்கல் 2026.01.16 அன்று J/318 - மீசாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் சம்பிரதாயபூர்வமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நாட்டப்பட்டது.

இதன் தொடர்சியான நடவடிக்கையாக .....

அப் பயனாளியினால் பூரணப்படுத்தப்பட்ட வீட்டின் புதுமனை நிகழ்வு 2026.04.28 செவ்வாய்க்கிழமை அன்று இடம்பெற்றது.



இந்நிகழ்வில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர் (பா.உ) அவர்களும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் கௌரவ கருணநாதன் இளங்குமரன் (பா.உ) அவர்களும் தென்மராட்சி பிரதேச செயலாளர் உயர்திரு F.C சத்தியசோதி அவர்களும் உதவி பிரதேச செயலாளர் திருமதி நி.லாகினி அவர்களும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு இ.திலீபன் அவர்களும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.







தென் துளிர் இதழ் குழு

- திரு F.C சத்திய சோதி (பிரதேச செயலாளர்)
- திருமதி லாகினி நிருபராஜ் (உதவி பிரதேச செயலாளர்)
- திருமதி சுபா தர்சன் (தகவல் மற்றும் தொடர்பாடல் **தொழில்**நுட்ப உதவியாளர்)
- திரு லோ.ஜெசிகரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
- திருமதி லாவண்யா சதாரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

மாதாந்த இதழாசிரியர்கள்

- திருமதி தனஞ்ஜயன் கலைவாணி (சமூக சேவை உத்தியோகத்தர்)
- திரு.இரத்தினசிங்கம் தர்மேந்திரா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- திருமதி கயுரீசன் பிறின்சியா (முகாமைத்துவ உத்தியோகத்தர்)
- திருமதி நிரஞ்சன் சரணியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)